

# ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

BOARD EXAM(10,+1,+2 NEET AND JEE பயிற்சி மையம்

SBM பள்ளி வளாகம், திருச்சி மெயின் ரோடு,நாமக்கல்

அலைபேசி :9965531727 - 9443231727

## அரையாண்டு பொது தேர்வு, டிசம்பர் - 2019

## விடைக்குறிப்பு

**பாடம்: சமூக அறிவியல்** **மதிப்பெண்:100**

| வினா எண் | பாடப்பொருள் | மதிப்பெண் |
|---|---|---|
| I. | பகுதி - I<br>உரிய விடையைக் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக. | 14x1=14 |
| 1 | அ) T. முத்துசாமி | 1 |
| 2 | ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 1 |
| 3 | இ) 1806 ஜுலை 10 | 1 |
| 4 | ஆ) கூற்று சரி காரணம் கூற்றுக்கு பொருத்தமானதாக உள்ளது | 1 |
| 5 | இ) ராஜாராம் மோகன் ராய் | 1 |
| 6 | ஆ) பக்ராநங்கள் அணை | 1 |
| 7 | இ) எரிப்பாசனம் | 1 |
| 8 | ஈ) பருத்தி | 1 |
| 9 | இ)3மற்றும் 15 | 1 |
| 10 | ஆ) தருமபுரி | 1 |
| 11 | ஆ) ஒருமுறை | 1 |
| 12 | இ) பூடான் | 1 |
| 13 | ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு | 1 |
| 14 | இ) (i),(iii) மற்றும் (iv) சரி | |
| II. | பகுதி - II(எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும்)<br>( வினா எண் 28 கட்டாய வினா ) | 10X2=20 |
| 15 | **மார்ஷல் திட்டம் என்றால் என்ன?**<br>• மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் செல்வாக்கினுள் வைத்துக் கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடு மார்ஷல் திட்டத்தை உருவாக்கியது.<br>இத்திட்டம் இரண்டாம் உலகப்போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டு வருவதற்காக அமெரிக்க டாலர்களைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்தது<br>• **இரண்டாம் உலகப்போருக்கு பிறகு ஏற்பட்ட வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், இடம்பெயர்வு போன்ற** | 2 |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| | பிரச்சனைகளே மேற்கு ஐரோப்பாவிற்குள் பொதுவுடைமைக் கருத்து வளரக் காரணமாய் அமையும் என்று அமெரிக்க ஐக்கிய நாடு கருதியது.<br>• அமெரிக்க ஐக்கிய நாட்டின் செயலர் ஜார்ஜ் சி.மார்ஷல் ஐரோப்பாவின் சுய முன்னேற்ற முயற்சிக்குத் தம் நாடு பண உதவி செய்யுமென்று அறிவித்தார். பதினாறு நாடுகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தன.<br>• நிர்வாக மற்றும் தொழில்நுட்ப உதவிகளும் அமெரிக்க ஐக்கியப் பொருளாதார ஒத்துழைப்பு நிர்வாகத்தின் கீழ் வழங்கப்பட்டன.<br>• ஐரோப்பிய நாடுகள் 13 பில்லியன் டாலர்கள் என்ற அளவிற்கு உணவுப்பொருள்கள், எரிசக்தி மற்றும் எந்திரங்களைப் பெற்றுக் கொண்டதோடு இதுவே ஐரோப்பாவின் தொழில் முன்னேற்றத்திற்கான முதலீடாகவும் அமையப்பெற்றது.<br>• நிதியுதவி வழங்கும் மார்ஷலின் திட்டமானது 1951 இல் முடிவுக்கு வந்தது. | |
| **16** | மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.<br>• அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைமையில் கூடிய முதலாளித்துவ நாடுகள் உலக அரசியலில் முதலாம் உலக நாடுகள் என்றும் சோவியத் நாட்டின் தலைமையில் கூடிய பொதுவுடைமை நாடுகள் இரண்டாம் உலக நாடுகள் என்றும் வழங்கப்பட்டன.<br>• இவ்விரு பிரிவிலும் சேராமல் வெளியிலிருந்த நாடுகளை மூன்றாம் உலக நாடுகள் என்றும் கூறினர். இச்சொல்லாடல் வழக்கத்திற்கு வரும் போது, வளர்ச்சிப் பாதையிலிருந்த ஆப்பிரிக்க- ஆசிய லத்தீன் அமெரிக்க முன்னாள் காலனி ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளையே அது குறித்தது.<br>• சோவியத் ஐக்கியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் உலகமயமாக்கல், பொருளாதாரப் போட்டி போன்ற புதிய சூழலால் அச்சொல்லாடல் அதன் முக்கியத்துவத்தை இழந்தது. | **2** |
| **17** | வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.<br>சதாரா, சம்பல்பூர், பஞ்சாபின் சில பகுதிகள் ஜான்சி மற்றும் நாக்பூர் ஆகியன அந்த வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன. | **2** |
| **18** | பெரியாரை ஒரு பெண்ணியவாதியாகமதிப்பிடுக.<br>i. பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார். குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார்.<br>ii. 1929 முதல் சுயமரியாதை மாநாடுகளில், பெண்களின் மோசமான நிலைகுறித்து குரல் கொடுக்கத் தொடங்கியதிலிருந்து, பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமைஉண்டு எனஆணித்தரமாக வலியுறுத்தினார்.<br>iii. "திருமணம் செய்து கொடுப்பது" எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார். அவைகளுக்கு மாற்றாக | **2** |

| | | |
|---|---|---|
| | திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்ற வார்த்தையைப் பயன்படுத்தவேண்டினார்.<br>iv. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார். சொத்துக்கள், பாதுகாவலர்களாக இருத்தல், மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைவேண்டுமென்றார்.<br>v. குடும்பக்கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.<br>vi. 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தைஅறிமுகம் செய்தது. அச்சட்டம் முன்னோர்களின் சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சம உரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தியது. | |
| **19** | ’பருவமழைவெடிப்பு’ என்றால் என்ன?<br>❖ தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வட இந்தியாவின் வெப்பநிலையானது 46$^0$C வரை உயருகிறது. இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்)’பருவமழை வெடிப்பு’ எனப்படுகிறது. இது இந்தியாவின் வெப்பநிலையைப் பெருமளவில் குறைக்கிறது | **2** |
| **20** | இந்தியாவில் உள்ள உயிர்க்கோளக் காப்பங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக<br>அகத்திய மலை - கேரளா<br>கட்ச் - குஜராத்<br>மன்னார் வளைகுடா - தமிழ்நாடு<br>மானாஸ் - அசாம்<br>நீலகிரி - தமிழ்நாடு | **2** |
| **21** | தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக<br>i. கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே கேரளாவும், வடக்கே ஆந்திரப் பிரதேசமும், வடமேற்கே கர்நாடகாவும், தெற்கே இந்தியப்பெருங்கடலும் தமிழ்நாட்டின் எல்லைகளாக அமைந்துள்ளன.<br>ii. மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீர்ச்சந்தி தமிழ்நாட்டையும் இந்தியாவின் தென்கிழக்கில் உள்ள இலங்கையையும் பிரிக்கிறன. | **2** |
| **22** | தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறை முகங்களைப் பட்டியலிடுக.<br>i. தமிழ்நாட்டில் 4 முக்கிய சர்வேதச விமான நிலையங்கள் உள்ளன. சென்னை சர்வதேச விமான நிலையம் இந்தியாவின் மூன்றாவது விமான நிலையம் இந்தியாவின்<br>ii. கோயம்புத்தூர் மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியன பிற சர்வதேச விமான நிலையங்கள் ஆகும்<br>iii. தூத்துக்குடி மற்றும் சேலம் உள்நாட்டு விமான நிலையற்கள் ஆகும். | **2** |

ஸ்ரீ கயல்விழி அகாடமி

| | | |
|---|---|---|
| | iv. சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி தமிழ்நாட்டின் மூன்று முக்கிய துறைமுகங்களாகும்<br>v. நாகப்பட்டினத்தில் இடைநிலை துறைமுகமும் - பிற பகுதிகளில் 15 சிறிய துறைமுகங்களும் உள்ளன | |
| **23** | **நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?**<br>நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப் பேராணை எனப்படும். இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும் | **2** |
| **24** | **பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.**<br>❖ பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்காஆகிய நாடுகள் பிராந்திய அளவில்மற்றும் சர்வதேச அளவில்வளர்ந்து வரும் பொருளாதார, அரசியல்சக்திகள் ஆகும் | **2** |
| **25** | **தனி நபர் வருமானம் என்றால் என்ன?**<br>தனி நபர் வருமானம் ( தலா வருமானம் ) என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும். நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.<br>தனி நபர் வருமானம் (தலா வருமானம்) = நாட்டு வருமானம் / மக்கள் தொகை | **2** |
| **26** | **FAO வின்படி உணவு பாதுகாப்பை வரையறு.**<br>"எல்லாமக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையை கொண்டிருக்கும் போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவு பாதுகாப்பு இருக்கிறது. | **2** |
| **27** | **வரிகளின் வகைகள்யாவை? எடுத்துக்காட்டு தருக.**<br>❖ நேர்முக வரி ( எ.கா வருமானவரி<br>❖ மறைமுகவரி (எ.கா) முத்திரைத்தாள் வரி, பொழுது போக்கு வரி. பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி. | **2** |
| **28** | **பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன?**<br>இது ஒரு அறிவியல் முறையிலான நீர்வள மேலாண்மை திட்டமாகும். ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணைகளைக் கட்டுவதால் இவை பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் என்று அழைக்கப்படுகிறது. | **2** |
| **III.** | **பகுதி - III(எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும்)**<br>**(வினா எண் 42 கட்டாய வினா)** | **10X5=50** |
| **29** | **கோடிட்ட இடங்கள்**<br>i)ரைன்லாந்து<br>ii) 21<br>iii) எம் பாத்திமா பீவி<br>iv) நேர்முக<br>v) தென் பெண்ணை | **5** |
| **30** | **பொருத்துக.**<br>1. சிங்யென்ரீ - கொரியா | |

| | | |
|---|---|---|
| | 2. டிரான்ஸ்வால் - தங்கம்<br>3. அய்யாவழி - வைகுண்ட சாமிகள்<br>4. தீர்த்தகிரி - ஓடாநிலை<br>5. தொழிலாளன் - சிங்காரவேலர் | 5 |
| 31 | **பொருத்துக.**<br>1) டெகிரி அணை - இந்தியாவின் உயரமான அணை<br>2) காகித ஆலை - நேபா நகர்<br>3) இன்சாட் - செயற்கைக்கோள் தகவல்தொடர்பு<br>4) ஜிப்சம் - திருச்சிரப்பள்ளி<br>**5)** பொதிகை மலை - கன்னியாகுமரி | 5 |
| 32 | **வேறுபடுத்துக.** | 2 |

| வ.எண் | கடல் மீன் பிடித்தல் | உள்நாட்டு மீன் பிடித்தல் |
|---|---|---|
| 1 | **தமிழ்நாடு கடல் மீன் உற்பத்தியில் முதன்மையான மாநிலங்களுள்** | **ஏரிகள், ஆறுகள் குளங்கள் கழிமுகங்கள் காயல்கள் மற்றும் சதுப்பு நிலப்பகுதி போன்ற நீர்நிலைகளில் உள்நாட்டு மீன் பிடித்தல் நடைபெறுகிறது.** |
| 2 | **மீன் பிடித்தலுக்கு பெரிய மற்றும் இயற்திர படகுகள் பயன்படுத்தப்படுகின்றன** | **கட்டுமரம் டீசல் படகுகள் மற்றும் மீன் வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்தல் நடைபெறுகிறது.** |
| 3 | **சுறா பறவை மீன் சங்கு மீன் கெளுத்தி, வெள்ளி வயிறு மீன் மற்றும் நண்டு வகைகள் பிடிக்கப்படுகின்றன.** | **சிப்பிகள் மற்றும் இறால்கள் மீன் பண்ணைகளில் வளர்க்கப் படுகின்றன** |

ii) (2)

| வண்டல் மண் | கரிசல் மண் |
|---|---|
| சிற்றோடைகள் மற்றும் ஆறுகளின் வேகம் குறையும் பொழுது படிய வைத்ததினால் உருவாகின்றன. | தக்காணப் பகுதியில் உள்ள பசால்ட்பாறைகளில் இருந்து உருவானது. |
| பொட்டாசியம் பாஸ்பெரிக் அமிலம் சுண்ணாம்பு மற்றும் கார்பன் கலவைகள் அதிகமாக காணப்படுகின்றன. நைட்ரஜன் குறைவாக உள்ளது. | கால்சியம் மக்னீசியம் கார்பனெட்டுகள் அதிக அளவிலான இரும்பு அலுமினியம் சுண்ணாம்பு மற்றும் மாங்கனீசு ஆகியன காணப்படுகின்றன. நைட்ரஜன் பாஸ்பெரிக் அமிலம் இலை மக்குகள் குறைவாக உள்ளன. |
| வளரும் பயிர்கள்<br>நெல், கோதுமை கரும்பு | வளரும் பயிர்கள்:<br>பருத்தி, திணை, கரும்பு |

**ஆ) காரணம்**

**இந்திய பெரும் பாலைவனம் மருஸ்தலி என்று அழைக்கப்படுகிறது.** (1)

**இப்பாலைவனம் ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கே**

| | | |
|---|---|---|
| | **இராஜஸ்தான் மாநிலத்தின் மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இந்தப் பாலைவனப் பகுதி மருஸ்தலி என்றும் அரை பாலைவனப் பகுதி பாங்கர் என்றும் இரு பகுதிகளாக அழைக்கப்படுகின்றன. இப்பாலைவனப் பகுதியில் பல உப்பு ஏரிகளும் மணல் திட்டுகளும் உள்ளன.** | |
| **33** | **பெண்க**ளின் மேம்பாட்டிற்கு 19ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக<br>ராஜாராம் மோகன்ராய்<br>• **சமூகத்தில் நிலவிவரும் உடன்கட்டை ஏறுதல் (சதி) குழந்தைத் திருமணம், பலதார மணம் போன்ற மரபு சார்ந்த பழக்கங்கள் குறித்து பெரிதும் கவலை கொண்ட அவர், அவற்றிற்கு எதிராகச் சட்டங்கள் இயற்றும்படி ஆங்கில அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தார்.**<br>• **விதவைப் பெண்கள் மறுமணம் செய்துகொள்ள உரிமை உடையவர்கள் எனும் கருத்தை முன்வைத்தார். பலதார மணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்றார்.**<br>• **அவருடைய கருத்துகளைப் பழமைவாத இந்துக்கள் எதிர்த்தனர். மக்களைப் பகுத்தறிவோடும், பரிவோடும், மனிதப் பண்போடும் இருக்கும்படி வேண்டுகோள் விடுத்தார்.**<br>• **கல்கத்தாவின் இடுகாடுகளுக்குச் சென்று விதவைகளின் உறவினர்களிடம் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கைவிடும்படி வேண்டிக் கேட்டுக் கொண்டார்.**<br>• **1829 இல் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் 'சதி' எனும் உடன்கட்டையேறும் பழக்கத்தை ஒழித்துச் சட்டம் இயற்றியதில் ராஜாராம் மோகன்ராய் முக்கிய பங்கு வகித்தார்.**<br>• **ராம்மோகன்ராய் பெண்ணடிமைத் தனத்தைக் கண்டனம் செய்தார். ஆண்களை பெண்களை கீழானவர்களாக நடத்தும் அன்றைய கால நடைமுறையை எதிர்த்தார்.**<br>• **பெண்களுக்குக் கல்வி வழங்கப்பட வேண்டும் எனும் கருத்தை வலுவாக முன்வைத்தார்.**<br>• **பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலக்கல்வியும் மேலைநாட்டு அறிவியலும் அறிமுகம் செய்யப்படுவதை முழுமையாக ஆதரித்தார்.**<br>பண்டித ஈஸ்வர்சந்திர வித்யாசாகர்<br>• **விதவைகளை எரிப்பதும் விதவை மறுமணத்தைத் தடைசெய்வதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதற்கு மறைநூல்களிலிருந்தே சான்றுகளை முன்வைத்தார்.**<br>• **அவர் தனது கருத்துக்களுக்கு ஆதரவான வாதங்களைக் கொண்ட சிறு நூல்களை வெளியிட்டார். அவர் நவீன வங்காள உரைநடையின் முன்னோடியாவார்.**<br>• **பெண்கல்வியை மேம்படுத்துவதில் முக்கியப் பங்காற்றிய அவர் பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவிகள் செய்தார்.**<br>• **இந்து சமூகத்தில் குழந்தைப் பருவத்திலேயே விதவைகளான சிறுமிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவே தனது முழுவாழ்வையும் அர்ப்பணித்தார்.**<br>• **பண்டித ஈஸ்வர்சந்திர வித்யாசாகர் தலைமையேற்ற இயக்கத்தின் விளைவாய் 1856 இல் மறுமண சீர்திருத்தச்** | 5 |

| | | |
|---|---|---|
| | சட்டம் (விதவைகள் மறுமணச் சட்டம்) இயற்றப்பட்டது.<br>பிரார்த்தனை சமாஜம்<br>• இந்த சமாஜத்தின் இரண்டு மேன்மை மிக்க உறுப்பினர்கள் R.C பண்டர்கர், நீதிபதி மகாதேவ் கோவிந்த்ரானடே ஆகிய இருவருமாவர். இவ்விருவரும் சாதி மறுப்பு, சமபந்தி, சாதி மறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாவர்.<br>• மகாதேவ் கோவிந்த்ரானடே(1842-1901) விதவை மறுமணச் சங்கம் (1861) புனேசர்வஜனிக் சபா (1870) தக்காணக் கல்விக்கழகம் (1884) ஆகிய அமைப்புகளை நிறுவினார்.<br>தயானந்த சரஸ்வதி<br>• குழந்தைத்திருமணம், விதவை மறுமணத்திற்கு மறுப்பு போன்ற பழக்கங்களும் அயல் நாடு சென்றால் தீட்டு என்று சொல்லப்படுதலும் மறைநூல்களால் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை என அறிவித்தார்.<br>ஜோதிபா பூலே<br>மறுமணத்தைக் குறிப்பாக மறுமணம் மறுக்கப்பட்ட உயர்சாதி இந்துக்களின் மறுமணத்தை ஆதரித்தார். ஜோதிபாவும் அவருடைய மனைவி சாவித்திரிபாயும் ஒடுக்கப்பட்ட மக்களின், பெண்களின் முன்னேற்றத்திற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். ஜோதிபா பெற்றோரில்லா குழந்தைகளுக்கென்று விடுதிகளையும் விதவைகளுக்கென காப்பகங்களையும் உருவாக்கினார். | |
| 34 | 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிகான காரணங்கள் மற்றும் பினவிளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும்.<br>ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை<br>i. 1840 மற்றும் 1850 களில் அஇரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.<br>ii. மேலதிகாரக் கொள்கை ஆங்கிலேயர் தங்களை வானளாவிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள். உள்நாட்டு ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகள் இணைக்கப்பட்டன.<br>iii. வாரிசு இழப்புக்கொள்கை அரசுக்கட்டிலில் அரியணை ஏற தமக்கு பிறந்த ஆண்வாரிசை உருவாக்க உள்நாட்டு ஆட்சியாளர்கள் தவறினல் அந்த ஆட்சியாளரது இறப்புக்குப்பின் அந்தப்பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.<br>iv. சதாரா, சம்பல்பூர், பஞ்சாபின் சில் பகுதிகள், ஜான்சி மற்றும் நாக்பூர் ஆகியன இந்த வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலேய ஆட்சியன் கீழ் கொண்டு வரப்பட்டன.<br>இந்தியக் கலாச்சார உணர்வுகள் பற்றிய தீவிரத் தன்மை இல்லாதது | 5 |

i. **ஆங்கிலேயர்களின் உள்ளார்ந்த உணர்வுகள் குறித்து மக்களுக்கு எப்போதும் சந்தேகம் இருந்து வந்தது.**
ii. **ஆடைக் கட்டுப்பாடுகள் சிப்பாய்களை கிறித்துவ மதத்துக்கு மாறச் செய்வதற்கான ஒரு முயற்சியாக அவர்கள் அஞ்சினார்கள்.**
iii. **அதே போன்று 1824ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பாரக்பூரில் சிப்பாய்கள் கடல்வழியாக பர்மா செல்ல மறுத்தனர்.**
iv. **கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்**
v. **ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர்.**
vi. **ஐரோப்பிய சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் இந்திய சிப்பாய்களுக்கு மிகக்குறைந்த அளவில் ஊதியம் வழங்கப்பட்டது**
vii. **அவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டததோடு மூத்த படையினரால் இனச் குறியிடப்பட்டு அவமதிக்கப்பட்டார்கள்**

**கலகம்**

i. **புதிய என்ஃபீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டாக்கள் பற்றிய வதந்திகள் புரட்சிக்கு வித்திட்டது.**
ii. **பசு மற்றும் பன்றிக் கொழுப்பில் இருந்து தயாரிக்கப்ட்ட பசை (கிரீஸ்கள்) இத்தகைய புதிய குண்டு பொதியுறையில் (காட்ரிட்ஜ்களில்) பயன்படுத்தப்படட்டதாக சிப்பாய்கள் பெரிதும் சந்தேகம் கொண்டனர்.**
iii. **அவற்றை நிரப்பும் முன் அதை வாயால் கடிக்கவேண்டி இருந்தது (இந்துக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு பசு புனிதம் வாய்ந்ததாகவும், முஸ்லிம்களுக்கு பன்றி இறைச்சி தடை செய்யப்பட்ட உணவாகவும் இருந்தது)**

**நிர்வாகத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்**

- 1875ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிட்டிஷ் அட்சியும் அதன் கொள்கைகளும் பெரிய அளவில் மாற்றங்களைச் சந்தித்தன. சுமூக சீர்திருத்தம் தொடர்பான விஷயத்தில் பிரட்டிஷ் அரசு எச்சரிக்கை மிகுந்த அணுகுமுறையைக் கையாண்டது.
- இந்திய மக்களுக்கு விக்டோரியா அரசியார் செய்த அறிவிப்பில் பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்று தெரிவித்தார் அரசுப்பணிகளில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் உறுதிமொழி கூறப்பட்டது.
- இந்திய ராணுவத்தின் கட்டமைப்பில் இரண்டு முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்தியர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டது.
- முக்கியமான பதவிகள் மற்றும் பொறுப்புகள் வகிப்பதிலிருந்து இந்தியர்கள் விலக்கி வைக்கப்பட்டனர்.

ஸ்ரீ சரஸ்வதி பப்ளிகேஷன்ஸ் அகாடமி

| | | | |
|---|---|---|---|
| | | காலாட்படையின் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்ட ஆங்கிலேயர், அவற்றுக்கு ஆளெடுக்கும் முயற்சியை இதர பகுதிகளுக்கும் 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சியின்போது ஆங்கிலேயருக்கு விசுவாமாக இருந்த சமூகங்களுக்கும் மாற்றினார்கள்.<br>• இந்தியா சமூகத்தில் சாதி மொழி மற்றும் மண்டலம் ஆகியன சார்ந்த வேறுபாடுகளை ஆங்கிலேயர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதையடுத்து அது 'பிரத்தாளும் கொள்கை' என்று அறியப்பட்டது. | |
| 35 | | இந்தியக் காடுகள் பற்றி விவரிக்கவும்.<br>**இந்தியாவின் இயற்கைத் தாவரங்கள் பின்வருவமாறு வகைப்படுத்தப்படுகின்றன.**<br>**அயனமண்டல பசுமை மாறாக் காடுகள்**<br>**ஆண்டு மழைப்பொழிவு 200 செ.மீட்டருக்கு மேலும் ஆண்டு வெப்பநிலை 22$^0$C க்கு அதிகமாகவும், சராசரி ஆண்டு ஈரப்பதம் 70 சதவீதத்திற்கு மேலும் உள்ள பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகிறன. கேரளா, கர்நாடகா, மகாராஷ்ட்ரா, அந்தமான் நிக்கோபர் தீவுகள், அசாம், மேற்குவங்கம், நாகலாந்து, திரிபுரா, மிசோரம், மணிப்பூர் மற்றும் மேகாலயா ஆகிய பகுதிகளில் இவ்வகைக் காடுகள் காணப்படுகிறன. இரப்பர், எபனி, ரோஸ் மரம், தென்னை, மூங்கில், சின்கோனா, சிடார் போன்ற மரங்கள் இங்குக்காணப்படுகின்றன. போக்குவரத்து வசதியின்மை காரணமாக இவை வியாபார ரீதியாக பெருமளவில் பயன்படுத்தப் படுவதில்லை.**<br>**அயன மண்டல இலையுதிர்க் காடுகள்**<br>**இவ்வகை காடுகள் ஆண்டு சராசரி மழைப்பொழிவு அளவு சுமார் 100 செ.மீ முதல் 200 செ.மீ வரை உள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. இப்பகுதியில் ஆண்டு சராசரி வெப்பநிலை 27$^0$C ஆகவும் மற்றும் சராசரி ஒப்பு ஈரப்பதம் 60 முதல் 70 சதவீதமாகவும் உள்ளது. இக்காடுகளில் உள்ள மரங்கள் வசந்த காலத்திலும் கோடைக்காலத்தின் முற்பகுதியிலும் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன. எனவே இக்காடுகள் இலையுதிர்க்காடுகள் என அழைக்கப்படுகின்றன. இமயமலைக்கு அருகில் அமைந்துள்ள பஞ்சாப் முதல் அசாம் வரையிலான பகுதிகள், வடசமவெளிகள், பஞ்சாப், ஹரியானா, ஆந்திரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்கம், மத்திய இந்தியா, ஜார்கண்ட், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், தென்இந்தியா, மகாராஷ்ட்ரா, கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம், கேரளா, தமிழ்நாடு போன்ற பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன. இங்கு தேக்கு மற்றும் சால் மிக முக்கிய மரங்களாகும் இதைத் தவிர சந்தனமரம், ரோஸ்மரம், குசம், மாகு, பாலாங், ஆம்லா, மூங்கில், சிசம் மற்றும் படாக் ஆகியவை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்களாகும். இக்காடுகள் நறுமண திரவியங்கள், வார்னீஷ், சந்தன எண்ணெய் மற்றும் வாசனை திரவியங்களை அளிக்கின்றன.**<br>**அயனமண்டல வறண்டக் காடுகள்**<br>**ஆண்டு மழைப்பொழிவு 50 செ.மீ முதல் 100 செ.மீ வரை** | 5 |

உள்ளபகுதிகளில் அயனமண்டல வறண்டகாடுகள் காணப்படுகின்றன. அயனமண்டல வறண்டகாடுகள் ஒரு இடைநிலை வகைக்காடாகும். கிழக்கு இராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், உத்திரப்பிரதேசத்தின் மேற்குப்பகுதி, மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ராவின் கிழக்குப்பகுதி, தெலுங்கானா, மேற்கு கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டின்கிழக்கு பகுதிகளில் இவ்வகைக்காடுகள் காணப்படுகின்றன. இலுப்பை, ஆலமரம், ஆவாராம் பூ மரம் , பலா, மஞ்சக் கடம்பு, கருவேலம் மற்றும் மூங்கில் ஆகிய முக்கிய மரவகைகளாகும். பாலைவன மற்றும் அரைப் பாலைவனத் தாவரங்கள்: இக்காடுகளை" முட்புதர்காடுகள்" என்றும் அழைப்பர். இவை ஆண்டு சராசரி மழைப்பொழிவு 50 செ.மீட்டருக்கு குறைவாகவும், அதிகவெப்பமும் மற்றும் குறைவான ஈரப்பதமும் கொண்ட பகுதிகளில் காணப்படுகின்றன. இவ்வகைத் தாவரங்கள் வடமேற்கு இந்தியப் பகுதிகளான மேற்கு இராஜஸ்தான், வடக்கு குஜராத் மற்றும் தென்மேற்கு பஞ்சாப் ஆகிய பகுதிகளிலும், தக்காண பீடபூமியின் கர்நாடகா, மகராஷ்ட்டிரா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் வறண்ட பகுதிகளிலும் காணப்படுகின்றன. கருவேலம், சீமை கருவேல மரம் , ஈச்சமரம் போன்ற மரங்கள் இக்காடுகளில் வளர்கின்றன.

மலைக் காடுகள்

உயரம் மற்றும் மழையளவின் அடிப்படையில் இக்காடுகள் வகைப்படுத்தப்படுகின்றன. இக்காடுகள் மேற்கு இமய மலைக்காடுகள் மற்றும் கிழக்கு இமயமலைக் காடுகள் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளன.

i. கிழக்கு இமயமலைக்காடுகள்: வடகிழக்கு இந்திய மாநிலங்களில் உள்ள கிழக்கு இமயமலைச் சரிவுகளில் இவை காணப்படுகின்றது. இவை 200 செ.மீட்டருக்கும் அதிகமான மழைப்பொழிவை பெறுகின்றது. மேலும் பசுமைமாறாக்காடுகள் வகையைச் சார்ந்தவை. 1200 - 2400 மீ உயரம் உள்ள பகுதிகளில் காணப்படும் இக்காடுகளில் சால், ஓக், லாரஸ், அமுரா, செஸ்ட்நெட், சின்னமன் போன்ற மரங்கள் வளர்கின்றன. 2400- 3600 மீ உயரங்களில் ஓக், பிர்ச், சில்வர், பெர், பைன், ஸ்புரூஸ், ஜுனிப்பர் போன்ற மரங்கள் காணப்படுகின்றன.

II. மேற்கு இமயமலைக் காடுகள்: ஜம்மு-காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், உத்ரகாண்ட் போன்ற மாநிலங்களில் மிதமான மழைப் பொழிவு உள்ள பகுதிகளில் இக்காடுகள் காணப்படுகின்றன. சுமார் 900 மீட்டர் உயரமுள்ள பகுதிகளில் அரை பாலைவனத் தாவரங்களான சிறு புதர் செடிகள், சிறு மரங்கள் போன்றவை வளருகின்றன. சுமார் 900 - 1800 மீ உயரம் உள்ளமலைகளில் சிர்பைன்எனப்படும் மரங்கள் அதிகமாகக்காணப்படுகின்றன. சால், சீமொல், டாக், ஜாமுன், ஜீஜீபி ஆகியன இங்கு வளரும் இதர முக்கிய மரங்களாகும். 1800 முதல் - 3000 மீ உயரமுள்ள பகுதிகளில் மித வெப்பமண்டல ஊசியிலைக்காடுகள் பரவியுள்ளன. இக்காடுகளில் சிர், தியோதர், நீலபைன், பாப்புலர், பிர்ச் மற்றும் எல்டர் போன்ற மரங்கள் வளர்கின்றன.

அல்பைன்காடுகள்

சுமார் 2400 மீட்டருக்கு மேல் உள்ள இமயமலைகளின் உயரமான

| | | |
|---|---|---|
| | பகுதிகளில் இவ்வகைக்காடுகள் காணப்படுகின்றன. இவ்வகைக்காடுகள் ஊசியிலை மரங்களைக் கொண்டுள்ளன. ஓக், சில்வர்பிர், பைன் மற்றும் ஜுனிபர் மரங்கள் இக்காட்டின் முக்கிய மரவகைகளாகும். கிழக்கு இமயமலைப்பகுதியில் இவ்வகையான காடுகள் பரந்த அளவில் உள்ளன.<br><br>**ஓதஅலைக் காடுகள்**<br>இக்காடுகள் டெல்டாக்கள், பொங்கு முகங்கள் மற்றும் கடற்கழி முகப் பகுதிகளில் காணப்படுகின்றன. இவை ஓதங்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாவதால் சதுப்புநிலக்காடுகள் மற்றும் டெல்டா காடுகள் எனவும் அழைக்கப்படுகின்றன. கங்கை-பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகளில் உலகில் மிகப் பெரிய சதுப்பு நிலக்காடுகள் உள்ளன. மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளிலும் இவ்வகை ஓதக்காடுகள் காணப்படுகின்றன. இவை"மாங்குரோவ்காடுகள்" என்றும் அழைக்கப்படுகின்றன.<br><br>**கடற்கரையோரக் காடுகள்**<br>இவை"கடற்கரை காடுகள்" எனவும் அழைக்கப்படுகின்றன. இங்கு சவுக்கு, பனை மற்றும் தென்னை ஆகியவை முதன்மையானதாகும். இவை இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்கு இரு கடற்பகுதியின் கரைப்பகுதிகளிலும் காணப்படுகின்றன. குறிப்பாக கேரளா மற்றும் கோவா பகுதிகளில் இவ்வகைகாடுகள் அதிகமாக உள்ளன.<br><br>**நதி வனப்பகுதி அல்லது ஆற்றங்கரைக் காடுகள்**<br>இக்காடுகள் கங்கை யமுனை நதி பாயும் பகுதிகளில் குறிப்பாக காதர் பகுதிகளில் காணப்படுகின்றன. இது பசுமையான புதர் தாவரங்கள் மற்றும் புளியமரம் போன்றவற்றிற்கு பெயர் போனவை. வடபெரும் சமவெளி பகுதிகளிலுள்ள ஆற்றுப்பகுதிகளில் இவ்வகைத் தாவரங்கள் அதிகம் காணப்படுகின்றன. | |
| 36 | சாலைப் பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்.<br>i. சாலை குறியீடுகள் பற்றிய விழிப்புணர்வு<br>ii. நில்,கவனி, செல்<br>iii. வாகனம் நெருங்கி வருகிறதா என்பதை உறுதி செய்தல்<br>iv. சாலைளில் அதிவரைவாக வாகனங்களை செலுத்துவதைத தவிர்த்தல்.<br>v. பாதசாரிகளுக்கான இடத்தில் சாலையை கடத்தல்<br>vi. வாகனம் ஓட்டும் போது கைகளை நீட்டாதிருத்தல்<br>ஒருபோதும் வளைவுகளில் வாகனங்களை முந்தாமல்<br>நின்று கவனமாக செல்லவும். | 5 |
| 37 | இந்திய அரசியலமைப்பின் சிறப்புக்கூறுகளை விளக்குக.<br>• உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.<br>• இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.<br>• இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.<br>• கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) | 5 |

ஏற்படுத்துகிறது.

- மத்தியில் மட்டுமல்லாமல் மாநிலங்களிலும் நாடாளுமன்ற முறையைத் தோற்றுவிக்கிறது.
- இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.
- சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.
- உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.
- ஒற்றை குடியுரிமையை வழங்குகிறது.
- சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் ஆகியோருக்கு சிறப்பு விதிகள் மூலம் சலுகைகள் வழங்க வகை செய்கிறது.

**38** பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.

I. உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க மேலாதிக்கத்திற்குப் போட்டியாகவும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

II. உறுப்பு நாடுகளிடையே பொருளாதார வளர்ச்சித்திட்டங்களை நிறைவேற்றவும், சொந்த மற்றும் சுயமாக நிரூபிக்கும் விதமாக இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

பிரிக்ஸின் நோக்கங்கள்

I. பிராந்திய வளர்ச்சியைஅடைவது

II. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இடையேபாலமாக செயல்படுவது

III. மனித மேம்பாட்டிற்கு மிகப்பரந்த அளவில் பங்களிப்பு செய்தல்

IV. அதிக சமத்துவம் மற்றும் நியாயமான உலகத்தை ஏற்படுத்துதல்

V. வணிக ஒத்துழைப்பைஅதிகரிக்கபிரிக்ஸ் நாடுகளுக்கிடையே உள்நாட்டு நாணயங்கள் மூலம் வணிகம் மேற்கொள்வதை ஊக்குவித்தல் மற்றும் நடப்பு சர்வதேச சிக்கல்களை எதிர்கொள்ளுதல்


உறுப்பு நாடுகளிடையே தகவல் தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்வதை ஊக்குவித்தல், உறுப்பு நாடுகளில் வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு பொருளாதார மாற்றங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல்.

**39** உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.


- உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் நீடிக்கப்பட வேண்டும். அவை தன்னிச்சையாக செயல்படாது.
- வளர்ந்து வரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சத்திற்குரியதாகும்
- உலகமயமாக்களினால் உலகளாவிய போட்டி அதிகரித்த

| | | | |
|---|---|---|---|
| | தொழில்துறை உலகில், ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள், வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை அடிமட்டத்திற்கு கொண்டு செல்ல இது வழிவகுக்கும்.<br>• இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.<br>• உலகமயமாக்கல் ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.<br>• உலகமயமாக்கலால் குழந்தை தொழிலாளர் மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.<br>• மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். இதனால் உடல்நலக் குறைவு மற்றும் நோய் பரவுதலுக்கு இது வழிவகுக்கிறது. | |
| 40 | தமிழ்நாட்டில் நெசவுத் தொழில் தொகுப்பு பற்றி எழுதுக?<br>❖ இந்தியாவில் மிகப் பெரிய நெசவுத் தொழில் துறைகளுக்கு தமிழ்நாடு தாயகமாக விளங்குகிறது.<br>❖ காலனித்துவ காலத்திலிருந்து பருத்தி நெசவுத் தொழில் வளர்ச்சியின் காரணமாக கோயம்புத்தூர் ”தென்னிந்தியாவின் மான்செஸ்டர்” என அழைக்கப்படுகிறது.<br>❖ தற்போது நெசவு ஆலைகளில் பெரும்பாலானவை கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள சிறு நகர்ங்கள் கிராமங்களுக்கு நகர்ந்துள்ளன.<br>❖ கோயம்புத்தூரைச் சுற்றி 100 முதல் 150 கி.மீ சுற்று வட்டார பகுதிகளாகும்.<br>❖ எனவே நமது நாட்டின் மிகப் பெரிய பருத்தி நெசவு தொழில் உற்பத்தியில் தமிழகம் பெரும்பங்கு வகிக்கிறது.<br>❖ கோயம்புத்தூரைச் சுற்றி அருகிலுள்ள பல்லடம் மற்றும் சோமனூர் சற்றி சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் நன்கு செயல்படும் விசைத்தறி நெசவுத் தொழில் தொகுப்புகள் தங்களது வீடுகளிலேயே சொந்தமாக உற்பத்தி செய்கின்றன.<br>❖ ஈரோடு மற்றும் சேலம் பகுதியிலும் அதிகளவிலான மின்தறி அலகுகள் இருப்பதால் மின்விசைத் தொழில் மிகவும் பரவலாக உள்ளது.<br>❖ திருப்பூரானது பின்னலாடை தயாரிக்கும் ஏராளமான நிறுவனங்களின் தொகுப்புகளுக்கு புகழ்பெற்ற இடமாகும்.<br>❖ இது நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதி கிட்டத்தட்ட 80மூ பங்கினைக் கொண்டுள்ளது.<br>❖ 1980 களின் பிற்பகுதியிலிருந்து மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது.<br>❖ இந்த மிகப்பெரிய வெற்றியின் காரணமாக உலகச் சந்தையில் உலகின் தெற்க அரைக்கோளத்தில் ஒரு சக்தி வாய்ந்த தொகுப்பாக இந்த இடம் உள்ளது.<br>❖ தற்போது இந்தியாவின் மிகப்பெரிய முன்னிணி பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் இங்கு தங்கள் | |

<table>
<tr><td></td><td>தொழிற்சாலைகளை அமைந்துள்ளனர்.</td><td></td></tr>
<tr><td>41</td><td>காலக்கோடு 1910 முதல் 1940 வரை ( ஏதேனும் ஐந்து)


</td><td>5</td></tr>
</table>

https://www.padasalai.net/

| | | |
|---|---|---|
| **42** | <br> | **5** |
| | **பகுதி - IV இரு வினாவிற்கு விடையளிக்கவும்** | **2x4=8** |
| **43** | a) **ஹோ சி மின்**<br>அ) **ஹோ** சி மின் எங்கே பிறந்தார்?<br>டோங்கிங்<br>ஆ) **ஹோ** சி மின் எவ்வாறு நன்கறியப்பட்ட வியட்நாமின் தேசியவாதியானார்?<br>தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக "விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்" எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது.<br>இ) **ஹோ** சி மினின்புரட்சிகர இளைஞர் இயக்கம் குறித்து நீவிர் அறிந்ததென்ன?<br>**ஹோ சி மின் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களை கற்றார். 1925 ல் புரட்சிகர இளைஞர் இயக்கம் என்னும் அமைப்பை நிறுவினார்.**<br>ஈ) வியட்நாம் விடுதலைச் சங்கம் இந்தோ- சீனாவில் எவ்வாறு அழைக்கப்பட்டது?<br>வியட்மின் | **4** |

b) ராமலிங்க அடிகள்

அ) ஜீவகாருண்யம் என்றால் என்ன?

தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடி கொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார்.

ஆ) அருட்பா என்றால் என்ன?

ராமலிங்க அடிகள் **இயற்றிய ஏராளமான பாடல்கள் திருவருட்பா என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டன. இவையே அருட்பா எனப்படும்.**

இ) சமரசவேதசன்மார்க்க சத்ய சங்கத்தின் முக்கியப் பங்களிப்பை குறிப்பிடுக.

**1866 இல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு1867இல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவசஉணவகத்தை வடலூரில் நிறுவினார்.**

ஈ) **தனது** இலவச உணவகத்தை அவர் எங்கே அமைத்திருந்தார்?

**அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார்.**

44

(அல்லது)

4

c) **வேலுநாச்சியார்**

**அ) வேலுநாச்சியார் இராணுவத் தளபதி யார்?**

**தளவாய் (இராணுவ தலைவர்) தாண்டவராயனார்**

**ஆ) அவர் தேர்ச்சிபெற்றிருந்த தற்காப்புக் கலைகள் எவை?**

**வளரி சிலம்பம் போர்கருவிகளைக் கையாளுவதல் குதிரை ஏற்றம் வீல் வித்தை**

**இ) அவர் யாரை மணமுடித்தார்?**

**முத்துவடுகநாதர் ( சிவகங்கை மன்னர்)**

**ஈ) அவரது மகளின் பெயர் என்ன?**

**வெள்ளச்சி நாச்சியார்**

d) **பெரியார் ஈ.வெ.ரா**

**அ) பெரியார்எப்போது திராவிடர்கழகத்தை தோற்றுவித்தார்?**

**1944**


**ஆ) பெரியார்நடத்திய செய்தித்தாள்கள், பத்திரிகைகள் ஆகியவற்றின் பெயர்களைக்குறிப்பிடுக.**

**குடிஅரசு (1925), ரிவோல்ட்(1928), புரட்சி (1933), பகுத்தறிவு (1934), விடுதலை மற்றும் (1935) ஆகும்.**


**இ)பெரியார் ஏன் "வைக்கம் வீரர்" என அறியப்பட்டார்?**

**சாதி தர்மம் என்றபெயரில் ஒடுக்கப்பட்டபிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ளவீதிகளிளும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்டநடைமுறையினைவைக்கம் (திருவாங்கூர்சமஸ்தானத்தின் ஒரு சுதேசி அரசு, தற்போதைய கேரள மாநிலத்திலுள்ளஒரு நகரம்) மக்கள் எதிர்த்தனர். எதிர்ப்பின் தொடக்கக்கட்டங்களில் மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ்**

<table>
<tr><td></td><td>ஜோசப் பெரும்பங்கு வகித்தார். உள்ளூர்தலைவர்கள் கைது செய்யப்பட்டபின்னர்பெரியார்இந்தஇயக்கத்திற்கு தலைமையேற்றதால் சிறையிலடைக்கப்பட்டார். மக்கள் அவரை வைக்கம் வீரர்எனப் பாராட்டினர்.<br><br>ஈ) பெரியாரின் மிகமுக்கியப் பணியாககருதப்படுவது எது?<br>பெண்களின் முன்னேற்றமே அவரின் முக்கிய பணியாக இருந்தது.</td><td></td></tr>
<tr><td>45</td><td>அ)




(அல்லது)</td><td>8</td></tr>
</table>




# SHRI KRISHNA ACADEMY

- **CREATIVE QUESTIONS**
  **ONE MARKS, TWO MARKS, THREE MARKS AND FIVE MARKS AVAILABLE IN ALL SUBJECTS**
- **MATERIALS(GUIDE)**
  **X - STD , XI - STD, XII - STD AVAILABLE IN ALL SUBJECTS**
- **FULL TEST QUESTION PAPERS**
  **X - STD , XI - STD, XII - STD AVAILABLE IN ALL SUBJECTS**
- **ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE in ALL SUBJECTS.**

→ **For MORE DETAILS - *99655 31727 , 94432 31727***